பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 10 சனிக்கிழமை (23-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 57

# சமாதான திட்டத்துடனேயே தளபதி கேணல் கிட்டு புறப்பட்டு வந்தார்

## குவாக்கர் குழு அறிக்கை; புலிகள் அறிவிப்பு ஊர்ஜிதம்

யாழ்ப்பாணம், ஜனவரி 23

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதானத் திட்டத்துடனேயே விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. கிட்டு இலங்கை நோக்கிக் கப்பலில் சென்று கொண்டிருந்தார்.

— இவ்வாறு தாங்கள் நம்புவதாக குவாக்கர் சர்வதேச சமாதானக்குழு அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்திருக்கிறது.

*குவாக்கர் குழுவின் பின்உந்துதலோடு தயாரிக்கப்பட்ட சமாதானத் திட்டத்துடன் வந்துகொண்டிருந்தபோதே கேணல் கிட்டு இந்தியப் படையால் வழிமறிக்கப்பட்டார் என விடுதலைப் புலிகள் ஏற்கனவே விடுத்த அறிவிப்பை குவாக்கர் குழுவின் அறிக்கை ஊர்ஜிதம் செய்திருக்கிறது.*

லண்டனில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கி வரும் குவாக்கர் குழு, இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது என்பது தெரிந்ததே.

மூத்த தளபதி கிட்டுவின் மரணம் குறித்து, குவாக்கர் சமாதானக்குழுவின் செயலாளர் திரு. அன்ட்ரு கிளார்க் லண்டனில் வெளியிட்ட அறிக்கை நேற்று கொழும்புக்குக் கிடைத்தது.

அந்த அறிக்கையில் —

திரு. கிட்டு ஒரு தீவிர போராளி என்ற போதிலும், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற ஆர்வம் அவரிடம் இருந்தது.

அவர் சமாதானத் தீர்வுக்காகக் கடுமையாக உழைத்து வந்தார். இத்தகைய சமாதானத் தீர்வுக்காகவே அவர் படகு மூலம் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றிருக்கக் கூடும். — என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பக்க சார்பற்ற குவேக்கர் குழுவின் இத்தகைய அறிக்கையின் மூலம் திரு. கிட்டு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் கடத்தல்

லண்டன், ஜன 23

அயோத்தியில் ராமர் கோயிலை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும் என்று கோரியும் —

அயோத்திச் சம்பவங்களை அடுத்து கைதானோரை விடுவிக்கும்படி கோரியும் —

லக்னோவிலிருந்து புறப்பட்ட உள்ளூர் விமானம் ஒன்றை பாரதீய ஜனதாத் தொண்டர் எனக் கருதப்படும் ஒருவர் 48 பயணிகளுடன்

( 5 ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலையில் தாக்குதல்; பொலீஸார் இருவர் பலி!

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் மன்னார் தீவில்—பேசாலையில்— நேற்றுக் காலை 7 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பொலீஸார் இருவர் கொல்லப்பட்டனர். கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தகவலை ஊர்ஜிதம் செய்தன.

பேசாலைபொலீஸ் நிலையத்தில் இருந்து துள்ளுக்குடியிருப்பு காவல் நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்த பொலீஸார் மீது தும்புவில்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுப் பாதை அரசு உதவி கேட்கிறது

### செஞ்சிலுவைச் சங்கத்திடம்

கொழும்பு, ஜன. 2௩

ஆனையிறவு ஊடாக யாழ் குடாநாட்டுக்கு பொருள்களைக் கொண்டு செல்வதற்கும் குடாநாட்டில் இருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்குக் கொண்டு வருவதற்கும விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒத்துழைப்பைப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரிப் பாதையை திறக்க ஜனாதிபதி இணங்கினார்?

யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கான போக்குவரத்தை சீர் செய்வதற்காக பூநகரிப் பாதையைத் திறப்பதற்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா சம்மதம் தெரிவித்துள்ளார்

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் மேற்பார்வையின் கீழ் பூநகரிப் பாதையைத் திறப்பதற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்திருக்கிறார் என்ற தகவலை —

கூட்டுப்படைகளின் தளகர்த்தர் ஜெனரல் வனசிங்கா தமக்குத் தெரிவித்ததாக யாழ். அரச அதிபர் திரு.கா மாணிக்கவாசகர் நேற்றுக் கூறினார்.

பூநகரிப் பாதையைத் திறப்பதற்கு வசதியாக அங்கிருந்து இராணுவம் அகற்றப்படுமா, இல்லையா என்பது பற்றி ஜெனரல் வனசிங்கா எதனையும் தம்மிடம் தெரிவிக்கவில்லை என்றும் அரச அதி

[5 ஆம் பக்கம் பார்க்க]

## மீட்பு நிதி

தமிழீழ மீட்புநிதிக் கடனை வழங்கத் தவறியவர்கள், நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் காலை 9.30 மணி தொடக்கம் 10 மணி வரை செலுத்தலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (ஓ)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

கிளாலி - பூநகரிப் படகுச் சேவை நாளை ஞாயிற்றுக் கிழமையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் நிதித்துறை வருவாய் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## டென்மார்க் குழு ஒத்துழைக்கும்

இலங்கை இனப்பிரச்சினைக்கு உறுதியானதும் இறுதியானதுமான தீர்வு ஏற்பட எம்மால் இயன்ற ஒத்துழைப்புகளை வழங்குவோம்.

சமரச சமாதானத் தீர்வு ஒன்று ஏற்படுவதற்கு மேற்கு நாடுகளின் உதவியுடன் பாடுபட்டு வருகின்றோம்.

டென்மார்க் மனித உரிமைகள் குழுவின் தலைவரும் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சின் பிரிவுத் தலைவருமான திரு. மாஸ் வீற்றர் இவ்வாறு தெரிவித்தார்,

கடந்த செவ்வாய் அன்று மூன்று உறுப்பினர்களைக் கொண்ட டென்மார்க் குழு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இளவாலைப் பகுதிக்கு யாழ். ஆயர் விஜயம்

இளவாலைப் பகுதியில் — இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் — சிக்கியுள்ள மக்களைப் பார்வையிடுவதற்காக யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ''குமாரி'' கப்பல் மூலம் நேற்று முன்தினம் அங்குசென்றார்.

அங்குள்ள பொதுமக்களை சந்தித்து, அவர்களின் நிலைமைகளை ஆயர் நேரில் கண்டறிவார். அவர் இன்று யாழ்ப்பாணம் திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது

(உ-8-111)

## சிறு படகு மூலம் கப்பலுக்கு கிட்டு குழுவினர் வந்தனர்

### உயிர் தப்பிய கப்டன் பேட்டி

லண்டன், ஜன. 23

கிட்டுவும் மற்றும் அவரது குழுவைச் சேர்ந்தவர்களும் கடந்த 7 ஆம் திகதி சிங்கப்பூர் கடல் வழியே சிறு படகு மூலம் கப்பலை வந்தடைந்தனர்.

— தளபதி கிட்டு வந்த கப்பலில் அவருடன் பயணம் செய்து உயிர் தப்பிய கப்பல் கப்டன் ஜெயச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொலீஸ் விசாரணைகளின் போது ஜெயச்சந்திரன் இவ்வாறு கூறியதாக பொலீஸ் செய்திகளை மேற்கோள் காட்டி ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' செய்தி வெளியிட்டது.

இந்தியக்கடற்படையினரிடம் கப்பல் சிக்கியபோது, கப்பலில் இருந்தோர் சரணடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. கடற்படையினர் கப்பலை அண்மித்ததும் வேறுவழியின்றித் தவிர்க்கமுடியாத முடிவை திரு. கிட்டு எடுத்தார்.

''கப்பலுக்கு வெளியே பாயும்படி கப்பல் சிப்பந்தி

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவைக் கண்டித்து ஆஸியில் தமிழர் பேரணி

விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. கிட்டு பலியானதற்கு இந்தியாவைக் கண்டனம் செய்து ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

தலைநகர் கான்பெராவில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு முன்பாக நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் ஐந்நூறு தமிழர்கள் கலந்து கொண்டனர். (உ-எ)

## நெடுமாறன் மற்றும் மூவர் பதினைந்து நாள் காவலில்!

சென்னை, ஜன. 23

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கூட்டம் நடத்த முற்பட்டதற்காக கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் ப. நெடுமாறன், முன்னாள் சபாநாயகர் கவிஞர் புலமைப்பித்தன், விடுதலைக் குயில்கள் அமைப்பின் தலைவர் சுப. வீரபாண்டியன் உட்பட நான்கு பேர் தற்போது 15 நாள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் சைதாப்பேட்டை 16 ஆவது நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது, இக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வங்கக் கடலில் இந்தியக் கடற்படையின் தலையீட்டால் புலிகள் பிரமுகர் கிட்டுவும் ஏனைய 9 வேங்கைகளும் உயிரிழக்க நேரிட்டதைக் கண்டித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்த போது நெடுமாறனும் ஏனையோரும் கைது செய்யப்பட்டதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (உ-எ)

### செஞ். அதிகாரிகளுக்கு

## கைதிகள் விடுதலை குறித்து தகவல் ஏதும் இல்லை!

யாழ்ப்பாணம், ஜன. 2௩

பலாலியில் இருந்து 15பேரை விடுவிப்பது தொடர்பாக தமக்கு இதுவரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்,

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 15 பேர் இன்று (வெள்ளி) விடுக்கப்படுவர் என்று அரச அதிபர் தெரிவித்ததாக நேற்றைய பத்திரிகைகளில் செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே.

ஸ்ரீலங்காப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய அரசைக் கண்டித்து

## கலைஞர்கள் இணைந்து ஊர்வலம், கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 23

இந்திய வல்லாதிக்க அரசு தமிழீழத்தின் மீது அழுத்தம் புரிந்து வருவதையும் —

கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளை வங்கக் கடலில் வைத்து மரணப் பொறிக்குள் சிக்க வைத்ததையும் கண்டித்தும், அந்த வேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் தமிழீழ கலை, இலக்கிய, பத்திரிகையாளர் அமைப்புகள் ஒன்றிணைந்து கண்டன ஊர்வலம் ஒன்றையும் அஞ்சலிக் கூட்டம் ஒன்றையும் நடத்தவிருக்கின்றனர்.

எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாச்சிமார் கோயிலடியில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகும். ஊர்வலத்தின் முடிவில் பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பற்றீஷன்
## தொழிற்பயிற்சி நிறுவனம்
## PATRICIAN INSTITUTES

தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் 27 - 01 - 1993 புதன் கிழமை அன்று ஆரம்பமாகின்றன.

01. **Computer Processing Courses**
    1. Computer Programming in BASI - Language and MS-DOS
    2. Word Processing and MS-DOS
    3. d BASE III Plus and MS-DOS
    4. Lotus 1-2-3 Spread Sheet Analysis and MS-DOS
02. **Civil Draughtsman and Quantity Surveying (Including Engineering Drawing)**
03. **Special English Classes**
04. **Toefl (Test of English as a Foreign Language)**
05. **Short-Hand and Typing (English)**
06. **Motor Mechanism** — மோட்டார் வாகனம் திருத்துதல்
07. **Motor Winding** — மோட்டார் வைன்டிங்
08. **Electrical Wiring** — மின்சார இணைப்பு
09. **General Electrician** — ஜெனரல் எலக்ரீஸியன்
10. **Air - Condition and Refrigeration**
11. **City and Guilds of London Examination- Year 93/94**
    1. Quantity Surveying
    2. Electrical Electronic Engineering - Technician (Part I & II, Part III)

● விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

*மேலதிக விவரங்களுக்கு:*

**REGISTRAR,**
**PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES,**
59 St PATRICK'S ROAD, JAFFNA.

பதிவாளர்,
பற்றீஷன் இன்ஸ்ரியூட்ஸ்,
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-4274)

---

யாழ். மாவட்ட
சனசமூக நிலையங்களுக்கான
## அறிவித்தல்

சில சனசமூக நிலையங்கள் இன்னமும் 1993ஆம் ஆண்டுக்கான தங்கள் நிலையத்துக்கான புதிய நிர்வாக உறுப்பினர்களின் தெரிவு விவரத்தைச் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவிக்கவில்லையென எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது ஆகவின் 26 01 - 1993ஆம் திகதிக்கு முன்னர் இவ் விவரங்களை உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சமர்ப்பித்து, நடைபெறவுள்ள சமாசத் தேர்தல்களில் தவறாது பங்கு கொள்ளும்படி சகல சனசமூக நிலையங்களையும் கேட்டுக் கொள்கின்றேன்.

(சுந்தரம் டிவகலாலா)
பிரதேச
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம். 1993 - 01 - 22. [சி-4279]

---

## எமது கண்ணீர் அஞ்சலி
### செல்வி கார்த்திகா பத்மநாதன்

இடைக்காடு மகாவித்தியாலய ஆண்டு 7 மாணவியும், இடைக்காடு மகாவித்தியாலய ஆசிரியர் திரு. வே. பத்மநாதனின் மகளுமான செல்வி கார்த்திகா 22-01-1993 அன்று காலை அகால மரணமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரம் அடைகின்றோம்.

அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பாடசாலை
அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள்,
இடைக்காடு மகா வித்தியாலயம்.

(24181)

---

## உற்சவம்

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த தைமாத குளிர்த்தி விழா இன்று சனிக்கிழமை நடைபெறும். (ஓ-12)

## கைதிகள்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஊடாகவே விடுவிக்கப்படவது வழமை என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் —

இளவாலையில் சிக்கியுள்ள பொதுமக்களில் சுமார் 15 பேரை அங்கிருந்து விடுவிக்க கூட்டுப்படைகள் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது என்றும் —

அவர்களை அங்கிருந்து அழைத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் —

அனேகமாக குமண சப்பல் வந்ததும் சம்பந்தப்பட்டவர்களை ஏற்றி வர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி கூறினார். (ஓ 3-15)

## சிறுபடகு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பணித்த திரு. கிட்டு, வெடிமருந்துகளை வெடிக்க வைத்து கப்பலுக்கு தீ மூட்டினார். அதன் பின் அவர்கள் ஒவ்வொருவரும் சயனைட் உண்டனர். இறுதியில் சயனைட்டைத் திரு கிட்டுவே உட்கொண்டார்.'' — இவ்வாறு ஜெயச்சந்திரன் மேலும் குறிப்பிட்டார்.

கப்பலில் ஆயுதங்கள் இருந்தன என்று அவர் குறிப்பிட்டதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

---

சனி—ஞாயிறு
## மீட்டல்
## வினா-விடை
[Paper Class]
## பாட வகுப்புகள்
[Theory Class]

**Chemistry—**
திரு சிவசோதி B. Sc.
**Accounts—**
திரு தேவதாஸ்
**Commerce—**
திரு. வரதன்

மாணவர்கள் தாம் A/L 95 பிரிவைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்தினால் மட்டுமே அனுமதி.

நேர அட்டவணையை பதிவாளரிடம் பெற்றுக் கொள்ளவும்.

**ஆரம்பம்: 23-01 93**

## BOND INSTITUTES
*யாழ்ப்பாணம்.*

(சி/4281)

---

## பேசாலையில்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்னுமிடத்தில் வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

பொலிஸாரிடமிருந்து ரி 56 ரகத் துப்பாக்கி ஒன்றையும் அவற்றுக்கான நான்கு மகஸின்கள் மற்றும் 84 எஸ் ரகத் துப்பாக்கி, அதற்குரிய மகஸின்கள் இரண்டு, 120 நடுத்தர ரவைகள், 5.56 ரக ரவைகள் அறுபது, மகஸின் ஹோல்ஸர் என்பவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். (உ-5-6)

---

# விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

92 பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கு

## கலை, வர்த்தக வகுப்பு
## மீட்டல் பிரிவு III
## DAY CLASSES
## ஆரம்பம்: 26-01-93
8 மணி.

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் |
| கணக்கியல் | — திரு. S K பிரபாகரன் |
| வர்த்தகம் | — திரு. இரகுநாதன் |
| அளவையியல் | — திரு. A. பிரபாகரன் |

*மாலை நேர வகுப்பு*

| | |
|---|---|
| இந்துநாகரிகம் / இந்துசமயம் | — திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — திரு குழந்தை |
| புவியியல் | — திரு. குணராசா |
| அரசியல் | — திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — திரு. சிறீதரன் |

★ செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு நாட்களிலும் நடைபெறும்.
★ கணக்கியல் வகுப்பு வாரத்தில் 8 மணி நேரம் நடைபெறும்.

(சி-4198)

---

## அறிவித்தல்

அண்மையில் கிளாலி ஏரியில் இடம்பெற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் இலவச சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து விவரங்கள் கோரப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு விவரங்களை அனுப்பி வைக்கவும்.

இணைப்பாளர்,
சட்ட உதவிப் பிரிவு,
இ. நீ. ச. இயக்கம்,
இல. 6, அலோசாலை,
கொழும்பு - 3

(சி/4280)

---

## இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்
## ஆண்டு 12 க. பொ. த. உயர்தரப் பிரிவிற்கான
## அனுமதி

1995 ஆம் ஆண்டில் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் கலை, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு விவசாய விஞ்ஞானம் ஒரு பாடமாக இராமநாதன் கல்லூரியில் கற்பிக்கப்படுவதனால் இப்பாடத்தைக் கற்க விரும்பும் மாணவர்கள் 28 01-93 அன்று காலை 9.30 மணிக்கு தகைமைச் சான்றிதழ்களுடன் கல்லூரிக்குச் சமூகமளிக்கவும்.

(சி/2539) — அதிபர்

---

# கடை திறப்பு விழா
# கௌரி பென்சி ஷொப்
## GOWRY FANCY SHOP



சிறப்புறு தை மாதம் 10 ஆம் நாள்
[23-01-93] சனிக்கிழமை காலை 8 மணிக்கு
வரும் மகர சுபலக்கினத்தில்
சுன்னாகம் புகையிரத நிலைய வீதியில்
அமைந்துள்ள
இல 14, கடை திறப்பு விழா நடைபெற
திருவருள் பாலித்துள்ளதால்
அன்பர்கள், நண்பர்கள் வருகை தந்து
வாழ்த்தி ஆதரவு நல்குமாறு
வேண்டுகின்றோம்.

(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை)

சுபம்.



14, புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

இங்ஙனம்,
து. பாலசுப்பிரமணியம்
(கௌரி ரவல்ஸ்)
(சி-2540)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள

# மன்னாரில் பயிர்கள் சேதம்!

# போக்குவரத்து சீர்குலைவு!!

## கவச வாகன நடமாட்டம் காரணமாம்

மன்னார், ஜன. 23

பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மன்னார் பெரும் நிலப்பரப்பில் விவசாயிகளின் பயிர்கள் சேதமாக்கப்பட்டுள்ளது டன்— போக்குவரத்து சேவைகளும் சீர்குலைந்துள்ளதாக அறிய வருகிறது.

இராணுவத்தினரின் கவச வாகனங்களின் நடமாட்டத்தாலேயே புதுக்கமம், காத்தான் குளம் முதலைக்குத்தி ஆகிய விவசாயப் பகுதிகளில் உள்ள சுமார் 54 ஏக்கர் பயிர்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

மன்னார் பெரும் நிலப்பரப்பில் வாழும் மக்கள் சார்பாக 15பேர் கொண்ட 'மன்னார்— மாதோட்டம் அத்தியாவசிய சேவைக்குழு' ஒன்று அண்மையில் மன்னார் செயலகத்தில் அரச அதிகாரிகளைச் சந்தித்த போது இதனைத் தெரிவித்தது.

மன்னார் பெரும் நிலப்பரப்பில் இருந்து புறப்படும் பஸ் சேவை மன்னார் நகரத்தை அடைந்த பின் — இச் சேவை மீண்டும் அடுத்த தினமே புறப்படுவதனால் அங்கிருந்து வரும் மக்கள் மன்னாரில் ஒரு நாள் இரவைக் கழிக்க வேண்டியுள்ளது என்று தெரிவித்த இக்குழு, சுகாதார சேவை வாரம் ஒரு தடவையே நடத்தப்படுவதாகவும் அதை நிரந்தர சேவையாக நடத்த வேண்டும் என்றும் அரச அதிகாரிகளை வற்புறுத்தியது.

(த)

### படையினரின் பாவனைக்கு 70 பஸ்கள்

கொழும்பு, ஜன. 23

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள படையினரும், பொலிஸாரும் பயன்படுத்தவென கூட்டுப்படைத் தலைமையகத்துக்கு 70 பஸ்கள் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பஸ்ஸும 61 ஆசனங்களைக் கொண்டது.

இந்த பஸ்களை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா, கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தின் முன்வைத்து, கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிடம் கையளித்தார்.

(த-எ)

### நோர்வே குழு விஜயம்

கொழும்பு, ஜன 23

மட்டக்களப்பு மாவட்டத்தில் நோராட் அமைப்பு மேற்கொள்ளும் புனர் நிர்மாண, புனர்வாழ்வுப் பணிகள் குறித்து ஆராயுமுகமாக நோர்வேயில் இருந்து பிரதிநிதிகள் குழு ஒன்று இம்மாதம் 27 ஆம் திகதி கொழும்பு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(த-எ)

### ஹட்சனின் முறைப்பாடு

கொழும்பு, ஜன. 23

தன்னைக் கொலை செய்ய கடந்த டிசம்பரில் இருந்து சிலர் திட்டமிட்டு வருவதாகத் தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாக கொழும்பு மாவட்ட எம். பி. ஹட்சன் சமரசிங்கா சபாநாயகரிடம் முறையிட்டிருக்கிறார்.

(த-எ)

### கலைப்பீட போதனைகள் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 23

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைப்பீடப்பாட போதனைகள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இப்போதனைகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.

(த-எ)

### உடுபுடைவை அன்பளிப்பு

உடுவில், ஜன 23

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் உள்ள மனநோயாளர் பிரிவில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு யாழ்ப்பாணம் மனித முன்னேற்ற நடு நிலையத்தினர் அண்மையில் உடுபுடைவைகளை வழங்கினர்.

[illegible]


JAFFNA TABLE TENNIS ASSOCIATION

யாழ்ப்பாணம் மேசைப்பந்தாட்ட சங்கத்தை ஸ்தாபிப்பதற்கான முதற் கூட்டம் இன்று 23-01-1993 பிற்பகல் 3 00 மணிக்கு யாழ்ப்பாணம் Y M. C. A. மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள அனைவரும் சமுகமளிக்கவும்.

— அமைப்பாளர்.

(24178)

வைத்திய சேவை

வாதரோகமா? நரம்புத் தளர்ச்சியா? உடல் பருமனா? உடல் மெலிவா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? குழந்தைகளின் வியாதிகளா? மாதவிடாய்க் கோளாறுகளா? சிறந்த சிகிச்சையும் உரிய ஆலோசனையும் கிடைக்கும்.

தினமும் } காலை 8-30 முதல் - 12-30 வரை
பி. ப 3-00 முதல் - 6-00 வரை

டாக்டர் த. சிவானந்தன்
D A M., R. A. M P. (Cey)
"சிவா வைத்தியசாலை",
384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

[24179]

ஸ்ரீலங்கா முதிர்விலுதவி
ஹெல்பேஜ் இலங்கை
HELPAGE SRI LANKA
தேசிய ரீதியிலான கட்டுரைப் போட்டி

கனிஷ்ட பிரிவு:
வயது 12இற்கும் 15இற்கும் இடைப்பட்டோர்
(300 சொற்கள்)

விடயம்:
1. எனது பாட்டனார்/பாட்டியார் இவரே எனது அருமை நண்பர்.
2. பிள்ளைகளாகிய நாம் முதியோரைப் பேணுவோமாக.
3 ஒவ்வொரு சமயமும் அதை அனுசரிப்பவரை முதியோரைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென வலியுறுத்துகிறது
4. அன்னையே அன்பின் ஊற்று.

சிரேஷ்ட பிரிவு:
வயது 16இற்கும் 19இற்கும் இடைப்பட்டோர்.
(400 சொற்கள்)

விடயம்:
1. நாளைய முதியோர் நாமே.
2. இலங்கை முதிர்விலுதவியின் (Helpage) கருதுகோள் முதியோரைப் பேணிப் பாதுகாத்தலே
3. இன்றைய சமுதாயத்திற்கு வித்திட்டவர் நம் முதியோரே.
4. முதியோர் நலனே எதிர்காலத் திட்டத்தின் பிரதான அம்சமாகும்.

மேற்படி கட்டுரைப் போட்டிகளின் முடிவு திகதி 28-02-1993 வரைக்கும் பிற்போடப்பட்டுள்ளது. கட்டுரைகள் இதுவரை அனுப்பாதவர்கள் மாசி மாதம் முடிவிற்குள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் பொதுக் காரியதரிசி, வை. எம். சி. ஏ. யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கலாம். கட்டுரை பற்றிய முழு விவரமும் ஏற்கனவே பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொதுக் காரியதரிசி,
வை. எம். சி. ஏ.,
யாழ்ப்பாணம்.

[சி-4271]

NEW ENGLISH ACADEMY
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

Special English Classes
B A., G. A. Q.

ஆசிரியர்: A சின்னத்தம்பி
(Retd , Education Officer, English)

ஆரம்பம்:
இன்று (சனி) நண்பகல் 12-00 மணி

— நிர்வாகி.

(சி-4193)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

93 கலை, வர்த்தகம்

சனி, ஞாயிறு மீட்டல்
ஆரம்பம்: 30-01-1993
8-00 மணி

| | |
|---|---|
| பொருளியல் | — திரு கலாகரன் |
| வர்த்தகம் | — திரு. தேவா |
| கணக்கியல் | — திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — திரு. விக்கி |
| தமிழ் | — திரு. குழந்தை |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — திரு. காரை.- சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — திரு. குணராசா |
| அரசியல் | — திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — திரு. சிறீதரன் |

பிரத்தியேக கணக்கியல் மீட்டல்

திரு. S K. பிரபாகரன்
(2-00 — 5-00 மணி)

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

((சி-4194)

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம், பளை.

பொது முகாமையாளர்
பதவி வெற்றிடம்

மேற்படி பதவி வெற்றிடம் சம்பந்தமாக 16-01-93 இல் உதயன், ஈழநாதம் இதழ்களில் வெளிவந்த விளம்பரத்தில் உள்ள விண்ணப்ப முடிவு திகதி 15-02-93 வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் தகைமைகள் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை "தலைவர், பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம், பளை" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

குறியீட்டு இல:
101/7 சம்பளத் திட்டம் (9 1105 — 60x4 – 75x11 — 2170 அத்துடன் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சகல படிகளும்.

வயது:
25—45 (கூட்டுறவுப் பணியாளர்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் இவ்வயதெல்லை பொருந்தாது)

தகைமைகள்

(1) கூட்டுறவுப் பணியாளரின் 8 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 9 ஆவது சம்பளத் திட்டத்தில் மேற்குறித்த வண்ணம் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது

(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் வர்த்தக / தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது

(3) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரமும் (உயர்தரம்) க. பொ. த. [உயர்தரம்] இல் 3 பாடங்களில் சித்தியுடன் வர்த்தக / தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

செ. மார்க்கண்டு,
தலைவர்.

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்,
பளை,
22-01-93.

[சி-4272]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆறு மாதங்கள் நிரம்பிய ''ரிட்பக்'' நாய் விற்பனைக்கு உண்டு. நல்ல கவனிப்பில் சிறந்த பயிற்சிகள் கொடுத்து வளர்க்கப்பட்டது விலை பேசித் தீர்க்கலாம். விலாசம்: ஆர். சுந்தரலிங்கம், ''ராஜி வாசம்'', மல்லாகம்.
(24156)

அடை வைப்பதற்கு உகந்த Bhamas, Japanese Bantom, வெள்ளடி முட்டைகள், கலப்பின முட்டைகள் உடன் விற்பனைக்குண்டு 70/6, ஈச்ச மோட்டை வீதி, யாழ்ப்பாணம். (5742)

ஊர்க்கோழிகள், சேவல்கள், குஞ்சுகள் விற்பனைக்குண்டு தொடர்பு: க. தயா, ''தமிழகம்'', லிங்கேஸ்வரன் வீதி, உரும்பராய் தெற்கு. உரும்பராய். (573 )

### கோழிகள் விற்பனைக்கு

அடைவைப்பதற்கு உகந்த ஜப்பனீஸ் பன்ரம், வெள்ளடி கோழிமுட்டைகளும் முட்டை இடும் பன்ரம் கோழிகளும் விற்பனைக்குண்டு தொடர்பு: கதிர் - தேநீர்க் கடை, தறை முக சந்தி, கொழும்புத்துறை.
(24174)

### மயூரதி வெளியீடு

கணிதம் ஆண்டு-8 வெளிவந்துவிட்டது ஆண்டு-9, ஆண்டு-10, O/L கடந்த கால வினா-விடை விற்பனையாகின்றன. பூபாலசிங்கம், மக்மிலன், ஸ்ரீலங்கா, ஸ்ரீகாந்தா, ஸ்ரீகாந், மது, தனலக்குமி ஆகிய இடங்களில் கிடைக்கும். (5473)

### மாற்றம் - 2

மக்கள் மனங்களில் ஏற்பட வேண்டிய மாற்றங்களைக் கொண்ட ''மாற்றம்'' (தை-பங்குனி) சஞ்சிகை வெளிவந்துவிட்டது. சிறுவர் கதை, சிறு கதை, மலேரியா, போட்டிகளைக் காண புத்தகசாலைகளை நாடுங்கள். ரூபா 10/-.
(24147)

### ஆங்கிலக்கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், வீடுகளிலும் கற்பிக்கப்படும். 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம்
(5737)

### இறைச்சிக் கோழிகள்

இறைச்சிக் கோழிகள் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் சுத்தம் செய்து பற்றிக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்
(24172)

### மணமகள் தேவை

பிரான்ஸில் குடியுரிமை பெற்று பத்து வருடங்களாக தொழில் புரியும் முப்பது வயது, இந்து, சுவாதி நட்சத்திரமுடைய மணமகனுக்கு A/L படித்த நற்குணமுள்ள, அழகான மணமகள் தேவை. சகதம் முழுவிவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல 485, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24171)

### மணப்பெண் தேவை

செவ்வாய்க்குற்றமற்ற, லக்கினத்தில் ராகு, பரணி நட்சத்திரம், கிரகபாவம் 16 உடைய 28 வயது சங்கீதப் பட்டதாரி ஆசிரியருக்கு மணப்பெண் தேவை. எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம்.
(24177)

### தவறிவிட்டது

தங்கவேலு ஆகிய நான் சுன்னாகம் ஊடாக உடுவிலுக்கு செல்லும் வழியில் (பொங்கலுக்கு முதல் நாள்) 1 பவுண் நிறையுடைய ஒரு தங்க மோதிரம் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ''ஜீவா'' பலசரக்கு மாளிகை, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.
(5492)

## யாழ். வாசி கைதானார்!

யாழ்ப்பாணம், ஜன 23

போலி அடையாள அட்டை வைத்திருந்ததாகக் கூறி யாழ். தமிழ் இளைஞர் ஒருவரைப் பாணந்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முஸ்லிம் பெயர் ஒன்றில் போலி அடையாள அட்டையை வைத்திருந்த யாழ் பிறவுண் வீதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு நந்தகுமார் என்பவரே கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 27 — 09 — 1929

மறைவு: 24 — 12 — 1992

அமரர்

**சின்னப்பு இரத்தினகுமாரன்**

(இளைப்பாறிய அப்போதிக்கரி, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

மனைவி, மகள்,
மருமகன்.

''பாக்கிய பவனம்'',
தொல்புரம். (சி/4191)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**இரத்தினம்மா சிவபாதசுந்தரம்**

மலர்வு: 11—10—1921

உதிர்வு: 04—02—1992

திதி: 23 — 01 — 1993

அன்பின் உருவமாய், பண்பின் சிகரமாய்
குடும்ப விளக்காக ஒளிதந்த எம் குலதெய்வமே!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. (573 )

## நேர்த்தியின்படி அறிக்கையிடுகிறேன்

சில்லையூர் மக்கள்: தங்களின்,
பாதுகாவலி;

கதிரைமாதா, ஆரோக்கிய மாதா, மருந்துமாதா, தஸ்நேவிசு, மாசில்லாத பூரணி என்று நெஞ்சுருக அழைக்கும் என்தாயிடம் எனது குடும்பக் கஷ்டத்தைச் சமர்ப்பித்தேன். எனது விண்ணப்பத்தையேற்று வழி காட்டியுள்ளார். அவவின் நாமத்தை சிரமேற்றிப் போற்றுகிறேன்.

எல்லாத் தலைமுறையினரும் அவளைப் பாக்கியவதி என்பார்கள்.

– சில்லையூரான்.

(24164)

## சகல பனை, தென்னை தொழில் வல்லுநர்களுக்குமான விசேட அறிவித்தல்

பனை, தென்னை என்பவற்றிலிருந்து கள், பதநீர் சீவுபவர்கள் சகலரும், அந்தந்தப்பகுதி தெங்கு – பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவராக இருத்தல் அவசியமானதாகும். எனவே நீங்கள் உங்கள் பகுதிகளிலுள்ள மேற்படி சங்கங்களோடு உடன் தொடர்பு கொண்டு முறைப்படி அனுமதிபெற்று தொழில் புரியும் மரங்களுக்கு சங்கங்களால் இலக்கமிட்டுக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றீர்கள். அங்கத்தவராயினும் சரி, இல்லாவிடினும் சரி, அனுமதியற்ற இலக்கமிடப்படாத தென்னை, பனை மரங்களிலிருந்து கள், பதநீர் உற்பத்தி செய்வது கண்டுபிடிக்கும் பட்சத்தில், அந்தந்தச் சங்கங்களால், தென்னைமரமாயின் கட்டவிழ்த்தும், பனைமரமாயின் பாளை வெட்டப்பட்டும், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இதைக் கவனத்தில் கொண்டு உங்களுக்கு ஏற்படும் பாதிப்பைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

**யாழ். பகுதி தெங்கு ப. பொ. கூ. சங்கங்களின் கொத்தணி**

1. யாழ். மாநகர தெங்கு ப. பொ. உ. வி. கூ. சங்கம்.
2. வலி-கிழக்கு (தென்பகுதி) தெங்கு ப. பொ. உ. வி. கூ. சங்கம்.
3. அரியாலை தெங்கு ப. பொ. உ. வி. கூ. சங்கம்.
4. வேலணை தெங்கு ப. பொ. உ. வி. கூ. சங்கம்.

(241 1)

## ஓராண்டு நினைவஞ்சலி



**இராமலிங்கம் நகுலேசு**

(இளைப்பாறிய பிரதம தபால அதிபட்சகர்)

மலர்வு: 21 - 04 - 1908

உதிர்வு: 04 - 02 - 1992

திதி: 23 - 01 - 1993

அன்பு அப்பாவே! எம்மை விட்டுப் பிரிந்து ஓர் ஆண்டு ஆனாலும், எங்கள் மீது காட்டிய அன்பும், பாச உணர்வுகளும், வழிநடத்தலும் எம்மை ஒரு போதும் விட்டகலாது. அப்பாவே உங்கள் ஆத்மா சாந்தி அடைய நாங்கள் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்பான மனைவி,
மகள், மருமகன்.

கட்டுடை,
மானிப்பாய். (24173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## பூநகரிப் பாதை விவகாரம்

பூநகரிப் பாதையைத் திறப்பதற்கு ஜனாதிபதி திரு. பிரேமதாசா சம்மதம் தெரிவித்திருப்பதாகச் செய்தி வெளிவந்துள்ளது. இந்தத் தகவலை கூட்டுப் படைகளின் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தம்மிடம் தெரிவித்ததாக யாழ் அரசாங்க அதிபர் கூறியிருக்கிறார்.

இந்தச் செய்தியைப் படிக்கும் மக்கள் தமது வயிற்றில் பால் வார்க்கப்பட்டதுபோல உணர்வார்கள். ஏனெனில் குடாநாட்டில் வாழும் ஒவ்வொருவரும் போக்குவரத்து வசதி சீரடைந்து பாவனைப் பொருள்களை குறைந்த விலையில் வாங்குவதற்கு வாய்ப்பு உருவாக மாட்டாதா என்ற ஏக்கத்துடனேயே தமது நாட்களைக் கழித்து வருகிறார்கள்.

ஆபத்து நிறைந்த கிளாலிக் கடற் பாதைக்கு மாற்றாக வேறு வழி ஒன்று திறந்துவிடப்பட வேண்டும் என்பதே குடாநாட்டு மக்களின் விருப்பமாகும். அவர்களது அவசரத் தேவையும் அதுவே.

ஆகையால் பூநகரிப் பாதையைத் திறப்பது — ஐ. நா தூதரகத்தின் மேற்பார்வையின் கீழ் திறப்பது — என்ற ஜனாதிபதியின் முடிவு, தமது பலவித கஷ்டங்களைப் போக்கும் என்று மக்கள் மனப் பூரிப்படைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் ஜனாதிபதியின் முடிவு பற்றிய தகவல் பூரணத்துவமானதாக இல்லை. வாய்மொழி மூலமானதாகவே இருக்கிறது. உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

கிளாலிப் பாதைக்குப் பதிலாக மக்களின் வசதி கருதி பூநகரிப் பாதையைத் திறக்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுதலைப் புலிகள் முன்வைத்திருந்தனர். மக்கள் இராணுவ ஆபத்தை எதிர்நோக்கும் மனோநிலையில் பயணம் செய்யும் நிலையைத் தவிர்ப்பதற்கு, பூநகரிப் பாதை அமைந்துள்ள பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றவேண்டும் என்றும் அவர்கள் கேட்டிருந்தனர். பாதுகாப்புக் கருதியே அந்த நிபந்தனை விதிக்கப்பட்டது.

ஆனால் ஜனாதிபதியின் சம்மதம் இந்த நிபந்தனையை நிறைவேற்றுவதாக உள்ளதா என்ற விவரம் வெளியிடப்படவில்லை. அங்குள்ளக்கான ஐ. நா. தூதரகத்தின் மேற்பார்வையின் கீழேயே பூநகரிப் பாதை திறக்கப்படும் என்று கூறுவதால், அப்பகுதியில் உள்ள இராணுவ முகாம்களும் காவலரண்களும் அகற்றப்படும் என்ற அர்த்தம் பிறக்கவில்லை. அது பற்றிய தனது பொறுப்பை ஜனாதிபதி, மிகச் சாதுரியமாக ஐ. நா தூதரகத்தின் தலையில்தூக்கி வைத்து விட்டார்!

ஆகையால், ஆபத்தை எதிர்நோக்கும் மனோநிலையில் மக்கள் பயணம் செய்யும் நிலையைத் தடுக்கும் பொறுப்பு ஐ. நா. தூதரகத்திடமே உண்டு. ஐ நா. அதிகாரிகள் இப்பொழுது கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் நடத்திவரும் பேச்சுகளில், இராணுவ முகாம்களை அகற்றுமாறு அரசை வற்புறுத்த வேண்டும். அரசின் வழுவல் போக்குக்கு இடமளிக்கக் கூடாது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சில அகதி முகாம்களைப் பொறுப்பேற்று நடத்துவதானால் குடாநாட்டுக்கு ஒரு சீரான, தடங்கல் இல்லாத போக்குவரத்துப் பாதை வேண்டும் என்பதில் ஐ நா. அதிகாரிகள் அக்கறையாக உள்ளார்கள். அதே போல மக்கள் பாதுகாப்பாகப் பயணம் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்வதிலும் ஐ நா. அதிகாரிகள் அக்கறை காட்டுவார்கள் என நம்புகிறோம்.

### கலைஞர்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

அஞ்சலிக் கூட்டத்தில் சகல கலை, இலக்கிய, பத்திரிகையாளர் அமைப்புகளையும் சேர்ந்தோரின் இரங்கல் உரைகளும், நாத அஞ்சலி, கவிதாஞ்சலி ஆகியனவும் இடம் பெறும். (உ)

## ஜி சீ. ஈ. (உ த) பரீட்சை பாடசாலை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஜன 23

நேற்று முன்தினம் வெளியான ஜி சீ ஈ (உயர்தரப்) பரீட்சை முடிவுகளின்படி, கல்லூரிகளில் கிடைத்த முக்கிய பெறுபேறுகள் நேற்று உதயனில் வெளியாகியிருந்தன.

எஞ்சிய ஒரு தொகுதி பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு :-

**மகாஜனா**

பொறியியல் :- 4ஏ (தமிழினி வாமதேவன்), 3ஏ பி. 2ஏ 2பி, 2ஏ பி ஸி, 3பி ஸி தலா ஒருவர்.

மருத்துவம்:- 2பி 2ஸி இருவர், பி 2ஸி எஸ் ஒருவர்

வர்த்தகம்:- 2ஏ பி ஸி, 3ஏ பி, ஏ 2பி ஸி, ஏ பி 2ஸி தலா இருவர், 4பி ஒருவர், ஏ 3ஸி அறுவர்.

கலை:- 2ஏ ஸி எஸ், ஏ 2ஸி எஸ், ஏ 3ஸி, 4பி 3பி ஸி தலா ஒருவர்.

**யூனியன்**

பொறியியல்:- 3பி ஸி, பி ஸி 2எஸ் தலா ஒருவர்.

மருத்துவம்:- பி 3ஸி ஒருவர்.

வர்த்தகம்:- ஏ 3பி ஒருவர், ஏ 2பி ஸி, ஏ பி 2ஸி, ஏ 3ஸி, ஏ 2ஸி எஸ் தலா இருவர், ஏ 2ஸி எஸ் ஒருவர்.

கலை:- ஏ 3ஸி, ஏ பி 2ஸி, 2பி 2ஸி தலா ஒருவர்.

**அருணோதயா**

வர்த்தகம்:- 2பி 2ஸி, பி 3ஸி தலா இருவர், பி 2ஸி எஸ் ஒருவர்.

கலை:- 2பி ஸி எஸ், பி 2ஸி எஸ், 4ஸி தலா ஒருவர், 3பி ஒருவர். (நான்காவது பாட முடிவு வெளிவரவில்லை)

**இளவாலை கொன்வென்ட்**

வர்த்தகம்:- ஏ 3ஸி நால்வர், ஏ 2ஸி எஸ் இருவர், பி 3ஸி ஒருவர்

**சென். ஹென்றீஸ்**

பொறியியல்:- பி 2ஸி எஸ் ஒருவர்.

வர்த்தகம்:- 2ஏ 2பி, 2ஏ 2ஸி, ஏ 3பி, ஏ பி 2ஸி, ஏ 2ஸி எஸ் தலா ஒருவர், 3பி ஸி இருவர்.

**மல்லாகம் ம. வி.**

கலை:- ஏ 2ஸி எஸ் ஒருவர்.

வர்த்தகம்:- பி 3ஸி ஒருவர்

**காரைநகர் யாழ்ற்ரன்**

வர்த்தகம்:- ஏ 2பி ஸி ஒருவர், 2பி 2ஸி, 4ஸி தலா இருவர்.

கலை:- 2பி ஸி எஸ், பி 3ஸி, 3ஸி எஸ் தலா ஒருவர்.

**வட்டு. இந்து**

பொறியியல் :- 3ஏ பி. 2பி 2ஸி, பி ஸி 2எஸ், ஏ 2பி ஸி தலா ஒருவர்.

வர்த்தகம் :- ஏ 2ஸி எஸ், ஏ 2பி ஸி, 2ஏ 2ஸி தலா ஒருவர், பி ஸி 2எஸ், பி 2ஸி எஸ் தலா இருவர்.

**யாழ்ப்பாணக் கல்லூரி**

பொறியியல் :- ஏ 2பி ஸி மூவர், ஏ பி 2ஸி ஒருவர்.

**விமன்காமம் ம. வி.**

கலை :- பி 2ஸி எஸ் ஒருவர்.

**பண்டத்தரிப்பு மகளிர்**

வர்த்தகம் :- ஏ 2பி ஸி, பி தலா ஒருவர், 3பி ஸி ஒருவர்.

கலை :- ஏ 3ஸி ஒருவர்.

**விக்டோரியா**

வர்த்தகம் :- ஏ 2ஸி எஸ், 2பி 2ஸி, 2பி ஸி எஸ் தலா ஒருவர்.

**நடேஸ்வரா**

வர்த்தகம :- 2பி 2ஸி இருவர், ஏ பி 2ஸி ஒருவர்.

மருத்துவம் :- 2ஏ 2எஸ் ஒருவர்

கலை :- 3பி எஸ் ஒருவர்.

**பண்டத்தரிப்பு இந்து**

பொறியியல் :- ஏ 2பி ஸி, ஏ பி 2ஸி, 2பி ஸி எஸ் தலா ஒருவர்.

வர்த்தகம் :- பி 2ஸி, 2பி ஸி எஸ் தலா ஒருவர்.

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

மருத்துவம் :- 4ஸி ஒருவர்.

பொறியியல் :- பி 3எஸ் ஒருவர்

வர்த்தகம் :- பி 3ஸி, பி 2ஸி எஸ் தலா ஒருவர்.

கலை:- பி 3ஸி, ஏ 2ஸி எஸ் தலா ஒருவர்.

**புத்தூர் சோமஸ்கந்தா**

வர்த்தகம்:- ஏ பி 2ஸி, ஏ பி ஸி எஸ், பி 2ஸி எஸ், ஏ 2ஸி எஸ் தலா ஒருவர், 2பி 2ஸி இருவர்

கலை;- பி3ஸி பி 2ஸிஎஸ் தலா இருவர்.

**சாவகச்சேரி இந்து**

மருத்துவம் ;- 2பி 2ஸி ஒருவர்.

பொறியியல் :- 3ஏ பி, 2ஏ 2பி தலா இருவர் 3ஏ எஸ் ஏ2 பி ஸி, ஏ பி 2ஸி, ஏ பி ஸி எஸ், 2பி 2ஸி, 2பி ஸி எஸ் தலா ஒருவர்.

வர்த்தகம் ;- 2ஏ 2பி, ஏ 3பி தலா மூவர், ஏ 2பி ஸி ஒருவர், ஏ2 பி எஸ் இருவர், 3பி ஸி ஐவர், 2பி 2ஸி ஏழுபேர், 2பி ஸி எஸ் மூவர், 2பி 2எஸ் ஒருவர், பி 3ஸி, பி2 ஸி எஸ் நால்வர், பி ஸி 2எஸ் மூவர், பி 3எஸ் ஒருவர், 4ஸி, ஏ 3ஸி தலா இருவர்.

கலை :- 3ஏ ஸி, 2ஏ பி எஸ் ஏ2 பி ஸி, ஏ பி 2எஸ், 3பி ஸி தலா ஒருவர், 2ஏ பி ஸி, ஏ பி 2ஸி, ஏ பி ஸி எஸ், 2பி ஸி எஸ், பி 2ஸி எஸ். தலா இருவர், ஏ பி2 எஸ், 3பி ஸி, பி ஸி 2எஸ், 4ஸி, ஏ 3ஸி தலா ஒருவர்.

**சாவகச்சேரி மகளிர்**

வர்த்தகம் :- ஏ 2பி ஸி, ஏ பி 2ஸி, 2பி 2ஸி, தலா ஒருவர், பி 3ஸி 4ஸி தலா இருவர்.

கலை :- 3பி ஸி, 2பி ஸி எஸ், பி 2ஸி எஸ், பி ஸி 2எஸ், 4ஸி, ஏ 2ஸி எஸ் தலா ஒருவர், 2பி 2ஸி, 2பி 2எஸ், பி 3ஸி தலா இருவர்.

**டிறிபேர்க்**

வர்த்தகம் :- 2பி 2ஸி, பி 3ஸி, பி2 ஸி எஸ் தலா ஒருவர்.

கலை :- 2ஏ 2ஸி ஒருவர்.

**மீசாலை விக்னேஸ்வரா**

கலை :- 2ஏ பி ஸி ஒருவர்.

**வேம்படி மகளிர்**

நேற்றைய உதயனில் வெளியான முடிவுகளோடு மருத்துவத்துறையில் ஒரு மாணவியின் 3ஏ ஸி பெறுபேறு சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்

## தேசியப் பட்டியல் மூலம் ஒஸிக்கு எம். பி. பதவி?

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவரான ஒஸி அபயகுணசேகரா நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெறும் வாய்ப்புகள் காணப்படுவதாக ஐ தே. கட்சிக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

'லங்கா தீப' பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

பெப்ரவரி மாத முடிவுக்கு முன் ஐ தே. கட்சியின் தேசியப் பட்டியலிலும் அமைச்சரவையிலும் மாற்றங்களைச் செய்ய தலைவர்கள் மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு முன் இம்மாற்றங்கள் செய்யப்பட உள்ளதாகவும் - தேசியப் பட்டியலில் ஒஸி அபயகுணசேகரா, றுக்மன் சேனநாயக்கா ஆகியோர் நடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட அதிக வாய்ப்பு இருப்பதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5 6)

### பொது விவாதம்:

## ஜனாதிபதி விடுத்த சவாலை எதிர்க்கட்சிகள் ஏற்றன

கொழும்பு, ஜன. 23

நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பொது விவாதம் ஒன்றை நடத்த முன்வருமாறு எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாஸா அண்மையில் சவால் விடுத்திருந்தார் அல்லவா? அச் சவாலை பல எதிர்க்கட்சிகள் ஏற்றுள்ளன.

ஆனால் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியோ, அப்பொது விவாதத்தில் தமது சார்பில் ஒரு விவசாயி, ஒரு தொழிலாளி, ஒரு மாணவன் ஆகியோரே ஜனாதிபதியுடன் விவாதம் நடத்துவார்கள் என்று அறிவித்துள்ளது;

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ். வட்ட லியோ கழகம் வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ 2.30 மணி;- சென் றோக்ஸ் அணி எதிர் சென் மேரிஸ் நீல அணி

★ 3.30 மணி:- ஜுபிற்றர் 'ஏ' அணி எதிர் சென் அன்ரனிஸ் 'ஏ' அணி.

★ 4.30 மணி: அரியாலை ஐ வி க. 'ஏ' அணி எதிர் யுத்காமல் அணி. (உ)

★ ★ ★

கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் அமரர்கள் மதனராஜன், சக்திபாலன ஆகியோர் நினைவாக நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தில் இன்று கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து ஷப்றா அணி மோதும் இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 1 30 மணிக்கு கொக்குவில் இந்து மைதானத்தில் ஆரம்பமாகும். (உ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 23

அச்செழு சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம், கழக மைதானத்தில் இன்று மாலை நடத்தும் கண்காட்சி உதைபந்தாட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ கோல்ட் ஸ்ரார் ''ஏ'' அணி எதிர் அம்பாள் ''ஏ'' அணி.

★ யங் றோயல் ''ஏ'' அணி எதிர் ஸ்ரீ முருகன் ''ஏ'' அணி.

★ திஸ்கோ ஸ்ரார் ''ஏ'' அணி எதிர் யுத் ''ஏ' அணி.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன 23

ஹற்றன் நஷனல் வங்கி யாழ் மாவட்ட அணிகளுக்கிடையில் யாழ் பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை ஜொனியன்ஸ் சிவப்பு அணியை எதிர்த்து பற்றிஷியன் வி. க. அணி மோதும். (உ)

### விமானம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தினார்.

தமது கையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பொருளைக் காட்டி, அது இரசாயனக் குண்டு எனக்கூறி அவர் விமானத்தைக் கடத்தினார்.

விமானம் கடத்தப்பட்டதை அடுத்து அந்த நபரின் நிபந்தனைப்படி அது மீண்டும் லக்னோவில் இறக்கப்பட்டது.

பாரதீய ஜனதாக் கட்சிப் பிரமுகர் வாஜ்பாயிடம் தான் சரணடைய விரும்புவதாக விமானத்தைக் கடத்திய நபர் அறிவித்தார்.

உடனடியாகத் தகவல் வாஜ்பாய்க்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, அவர் லக்னோ விமான நிலையத்துக்கு விரைந்தார்.

அங்கு ரவிச்சந்திர பாண்டே என்ற அந்த நபர் வாஜ்பாயிடம் சரணடைந்தார்; 48 பயணிகளும் தீங்கின்றி விடுவிக்கப்பட்டனர்; கடத்தல் நாடகம் முடிவுக்கு வந்தது

மேற்படி நபர் தற்போது பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் — அவர் கையில் வைத்து மிரட்டிய பொருள் வெறும் பூங்கொத்து என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

### பூநகரிப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டார் மேலும் தெரிவித்தார்.

குடாநாட்டுக்கான போக்குவரத்தை சீர் செய்யும் பொருட்டு பூநகரிப் பாதையைத் திறக்க வேண்டும் என்றும்

மக்களின் பாதுகாப்புக் கருதி அந்தப் பாதையை அண்டியுள்ள இராணுவ முகாம்களையும் காவலரண்களையும் அகற்ற வேண்டும் என்றும் — விடுதலைப் புலிகள் கோரியிருந்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் அதி. வண. ஜெனத் பெர்னாண்டோ தம்மைச் சந்தித்தபோதும், தலைவர் பிரபாகரனும் பூநகரிப்பாதையை அரசாங்கம் திறக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார். (அ-3-5)

## ஒத்திவைப்பு

யாழ்.மாவட்டத்தில் இன்று நடைபெறவிருந்த ஜி. சி. ஈ உயர்தர தாபகவித ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது (ஏ)

o o o

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திப் போடப்பட்டிருப்பதாக யாழ். செயலகத்துக்கு நேற்றுத் தகவல் கிடைத்துள்ளது.

மேற்படி பரீட்சை இம்மாத இறுதியில் நடைபெறும் என முன்னர் வெளியான தகவலை அடுத்துப் பெரும்பாலான விண்ணப்பதாரிகள் இங்கிருந்து ஏற்கனவே கொழும்பு சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஆயுதக் கப்பல் பிடிபட்டது

தற்போது தீவிர சண்டை இடம்பெற்று வரும் பொஸ்னியாவுக்கு ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு கராச்சியில் இருந்து சென்ற பாகிஸ்தான் கப்பல் ஒன்றை நடுக்கடலில் அமெரிக்கக் கடற்படை தடுத்து நிறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது

அக்கப்பலில் அரிசி மூடைகளுக்கு இடையில் ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

முன்னாள் யூகோஸ்லேவியா நாட்டில் உள்ள பொஸ்னியாவுக்கு ஆயுதங்கள் எடுத்துச் செல்வதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை தடை விதித்து இருப்பது தெரிந்ததே. (உ)

## ராவ் எச்சரிக்கை

தற்போதைய இந்து - முஸ்லிம் கலவரம் பரவ அனுமதிக்கப்படின் இந்தியா பல துண்டுகளாக சிதறும் ஆபத்து உருவாகும்

பிரதமர் பி. வி நரசிம்ம ராவ் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட பம்பாய் நகரைப் பார்வையிட்ட பின்னர், செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

### டென்மார்க்...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு சமாதானக் குழுவைச் சந்தித்து டென்மார்க் குழு உறுப்பினர்கள் உரையாடினார்கள். (த-எ)

### ஆனையிறவுப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமாறு அரசாங்கம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைக் கேட்டிருக்கிறது.

இத்தகவலை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா வியாழக்கிழமை மாலை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

ஆனையிறவுப் பகுதிக்கு ஊடாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலைத் தொடுக்கப்போவதில்லை என்று வழமைக்கு மாறான வகையிலான உறுதி மொழி ஒன்றைத் தருவதற்கும் அரசாங்கம் தயாராக இருக்கிறது என்றும் அமைச்சர் சொன்னார்.

கிளாலி கடலேரிப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. அதனூடாக மக்கள் பயணம் செய்வதானால் ஆபத்தை எதிர்நோக்கும் மனநிலையில் தான் செல்லவேண்டும் இக்கடல் ஏரியில் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது

விடுதலைப் புலிகள் இப்பாதையைத் தங்கள் இராணுவ நோக்கங்களுக்காகவே பயன்படுத்துகிறார்கள் பயணம் செய்யும்போது அவர்கள் பொதுமக்களுடன் கலந்து சென்று வருகின்றார்கள் — என்றும் திரு. ரணில் விக்கிரமசிங்கா கூறினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் அரசின் சார்பில் பதிலளித்துப் பேசுகையிலேயே மேற்கண்டவற்றை அவர் சொன்னார். (அ-எ)

### சமாதான திட்ட...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமாதானத் திட்டத்துடனேயே யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றார் என்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்சிகள் குறிப்பிட்டன.

(உ-எ-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசமணி சுந்தரம்
(மானிப்பாய்)

மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த இராசமணி சுந்தரம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் சுந்தரத்தின் (நாவற்குழி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற விமலராணி, ஜெயபூரணதேவி, சிவகுமார் (உரிமையாளர்-சுந்தர்சன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறினிவாசன், கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிறீதர், சிறீராம், சிறீஜெயந்தி, சிறீதர்சினி, பிரதீபன், சியாமி, றொபிக்கா, பிருந்தி, நிதர்சனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

ஈமக்கிரியைகளின் பின் அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு இன்று (23 - 01 - 1993) சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
சு. சிவகுமார்

சுந்தர்சன்,
மானிப்பாய்.
(24167)

## தங்கராஜா அரியநாயகம்

அச்சுவேலி தொழிற்பேட்டை வீதியைச் சேர்ந்த தங்கராஜா அரியநாயகம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மேரி அக்னளினின் அன்புக் கணவரும், றாஜேஸ்வரன், றஜி, ரவி, றாதிக்கா, றாஜன், றஞ்சித், கலா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அன்ரனிப்பிள்ளை, காலஞ்சென்ற குலசிங்கம், திருமதி பெனடிற், திரு. ஜோர்ஜ் அரியநாயகம், திருமதி பெனடிற், திருமதி யேசுநாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற J. A. ஜெகராஜா, சிங்கராஜா, ராணி, நவமணி, அருட்தந்தை செல்வராஜா, அருட்சகோதரி ஜெறோம், சபீனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவரது நல்லடக்கம் இன்று (23-1-93) காலை 9 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தகவல் :
J. P. சிங்கராஜா
(மைத்துனர்)

(24184)

## செல்லத்துரை செல்வரட்ணம்(R K)
[மாநகரசபை ஓய்வுபெற்ற பதிவேட்டுக் காப்பாளர்]

செல்லத்துரை செல்வரட்ணம் 22-1-93 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற (ஸ்டேசன் மாஸ்டர்) திரு. திருமதி செல்லத்துரையின் அன்பு மகனும், திரு. திருமதி பெரியதம்பியின் அன்பு மருமகனும், திருமதி நேசரட்ணத்தின் அன்புக் கணவரும், செல்வி யசிந்தா, செல்வன் ஜனத்குமார் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. மணியம்(ஆட்டிஸ்ற்), திருமதி பாக்கியம், திருமதி நீலாவதி (மலேசியா), காலஞ்சென்ற திரு. நவரட்ணராஜா, திருமதி சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. பஞ்சரட்ணம், திரு. சிவதாசன், திரு. குகதாசன், திருமதி தயாளினி, செல்வன் விஜயதாசன் ஆகியோரின் சிறிய தந்தையும், செல்வி அனுசாந்தி, செல்வன் நிரோசானந்த் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23-1-93) பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆட்டிஸ்ற் மணியம்

55, செட்டித்தெரு,
நல்லூர்.
(24185)

## PASTOR BONNY

இலங்கை பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்த பாஸ்டர் பொன் வெஞ்சர்கிருஸ் 21 ஆம் திகதி வியாழனன்று மகிமைக்குள் பிரவேசித்துவிட்டார்.

அன்னாரது அடக்க ஆராதனை 25 ம் திகதி திங்கட்கிழமையன்று பி. ப. 3 மணிக்கு 11 றொட்றிகோ பிளேஸ் மட்டக்குளியில் உள்ள இலங்கை பெந்தெகொஸ்தே சபை சாலையில் நடைபெறும்.

அச்சமயம் 111, கண்டி வீதி, சுண்டுக்குளியில் உள்ள இலங்கை பெந்தெகொஸ்தே சபையிலும் ஆராதனை ஒன்று நடைபெறும். விசுவாசிகளும், அன்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோ D. ஸ்ரான்லி

111, கண்டி வீதி,
சுண்டுக்குளி.
(24187)

## வல்லிபுரம் சேதுகாவலர்

கைதடி கிழக்கைச்சேர்ந்த வல்லிபுரம் சேதுகாவலர் 22-1-93 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும், சங்கரப்பிள்ளை (ஸ்ரீகாந்தா ஸ்ரோர்ஸ் கைதடி), ஆறுமுகம் (இளைப்பாறிய விற்பனை திணைக்கள அதிகாரி), செல்லம்மா, அன்னமுத்து, தெய்வானை, சோமசுந்தரம் (குகன் ஸ்ரோர்ஸ் கைதடி), செல்லத்துரை இளைப்பாறிய விற்பனைத் திணைக்கள அதிகாரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாட்சி, செல்லமுத்து, தம்பையா, காலம்சென்ற கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம் (இளைப்பாறிய நில அளவைப் பகுதி), கதிர்காம்பிகை, சிதம்பரம் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23-1-93) மு. ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊற்றல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

கைதடி. (24186)

# லொறி சில்லில் சிக்கி மாணவி நசியுண்டு பலி

## புத்தூரில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 23

புத்தூரில் வாதரவத்தை வீதிச் சந்தியில் நேற்றுக் காலை 8 மணியளவில் மாணவி ஒருவர் லொறி விபத்தில் சிக்கி அந்த இடத்திலேயே நசியுண்டு பலியானார்.

பாடசாலைக்கு தந்தையும் மகளும் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர் என்றும், அப்போது பின்னால் வந்த லொறியுடன் சைக்கிள் விபத்துக்குள்ளாகியதாக அந்த லொறியின் பின்சில்லு மணவியின் தலைக்கு மேலாக ஏறிச் சென்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் இடைக்காடு மகா வித்தியாலய மாணவியான பத்மநாதன் கார்த்திகா (12 வயது) தலை நசியுண்டு — சிதைந்து கோரமாகப் பலியானார்.

காயமடைந்த தந்தையான இடைக்காடு மகாவித்தியாலய ஆசிரியர் வே.பத்மநாதன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் சம்பந்தப்பட்ட லொறி பருத்தித்துறையில் இருந்து பொருள்களை ஏற்றி வந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-5-11-72)

## நாளை

சுவாமி விவேகானந்தரின் 130 ஆவது ஜெயந்தி தினத்தை யொட்டியும், அவரின் அமெரிக்க சர்வமத மகாசபைப் பிரசங்கத்தின் நூற்றாண்டு விழாவையும் முன்னிட்டு இராமகிருஷ்ணாலய நுண்கலைக் கல்லூரி வழங்கும் நடன அரங்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3.30 மணிக்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கத்தில் நடைபெறும். க)

★ ★ ★

யாழ்ப்பாணம் இந்து சமயப்பேரவையால் இந்து ஆலய தர்மகர்த்தாக்கள், முகாமையாளர்கள், பரிபாலன சபையினருக்காக 17-01-93 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டு பின்னர் பிற்போடப்பட்ட இந்துக் கோவில்கள் சம்பந்தமான கருத்தரங்கும், நூல் வெளியீடும் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

நல்லூர் ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் 11 ஆம் ஆண்டு பொதுக்கூட்டம் நாளை காலை 10 மணிக்கு, திருநல்வேலி இ. த. க. பாடசாலையில் நடைபெறும். (ஒ)

## இன்று

வடமராட்சிக் கோட்டப் பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று, இன்று சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (க-18)

o o o

அராலித் தெற்கு களவத்துறை சனசமூக நிலையத்தின் வருடாந்த விழாவையொட்டி இன்று மாலை 5 மணிக்கு சிறுவர் கலை நிகழ்ச்சி, பட்டிமண்டபம், நாடகங்கள் முதலியன இடம்பெறும். (க-18)

o o o

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் கடந்த 17 ஆம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடத்த ஏற்பாடு செய்திருந்த கலை நிகழ்ச்சி, இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து செபஸ்தியான்
(சாரதி சிறுவர் பாதுகாப்பு நிதியம், ஐ. இ.)

திருநெல்வேலி கலாசாலை வீதியைச் சேர்ந்த சரவணமுத்து செபஸ்தியான் நேற்று காலமாகிவிட்டார் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்;
சிறுவர் பாதுகாப்பு நிதிய ஊழியர்கள்
யாழ்ப்பாணம்.
(24189)

# சிவ சேனைக்கு தடை வரும்?

இந்து அமைப்பான சிவ சேனை கட்சியைத் தடை செய்வது குறித்து மத்திய அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் இத்தகவலை செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (உ-ா)

அச்செழு
சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகம்
நடத்தும்

## காட்சி உதைபந்தாட்டப் போட்டி

இடம் : சித்திவிநாயகர் வி. க. மைதானம், அச்செழு
காலம் : இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 30 மணி

பங்குபற்றும் கழகங்கள்

- ★ கோல்ட் ஸ்ரார் (A) எதிர் அம்பாள் (A)
- ★ யங்றோயல் (A) எதிர் சிறிமுருகன் (A)
- ★ றிங்கோஸ்ரார் (A) எதிர் யுத் ( )

(24188)

# மரண அறிவித்தல்கள்

## அகஸ்ரீன் பிரான்சிஸ்

பலாலி புனித செபஸ்தியார் கோவிலைச் சேர்ந்தவரும், நாட்டுக்கூத்து அண்ணாவியும், புனித செபஸ்தியா கோவில் முன்னைநாள் சங்கிலித்தாருமாகிய திரு அகஸ்ரீன் பிரான்சிஸ் அவர்கள் 90 ஆவது வயதில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஞானம்மாவின் அன்புக் கணவரும், திருமதிகள் அ. பரமேஸ்வரி, ம. மரிய செல்வராணி (ஆசிரியை - காங்கேசன்துறை ம. ம. வித்தியாலயம்), தி. மரியபுஸ்பம், இ. மேரிறோஸ்முத்து, திரு திருஞானசீலன் [ஆசிரியர் - வலைப்பாடு றோ. க. பாடசாலை] ஆகியோரின் அன்புத் தந்தையும், அபிஷேகநாதன், மரியரட்ணம், திருச்செல்வம் C.T.B. சாரதி), இம்மானுவேல் தோலகட்டி விற்பனைப் பிரதிநிதி, திருமதி வீவிமலர் திருஞானசீலன் ஆகியோரது அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான கத்தறீன், லேனம்மா, சுவாணம், மதலேனம், எலிசபேத் மற்றும் இளைப்பாறிய பாடசாலை அதிபர் செபமாலை ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கோப்பாய் தபாற்கந்தோருக்கு அருகில் உள்ள அவரது தற்காலிக இல்லத்தில் இருந்து புனித மரியாள் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக இன்று (23-01-93) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
அ. இம்மானுவேல்,
(தோலகட்டி விற்பனைப் பிரதிநிதி)

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்
(24183)

## நடராசா பொன்னையா

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தவரும், தற்போது கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவரும், மாதகலைச் சேர்ந்த காலஞ்சென்ற நடராசா சீனிக்குட்டியின் புதல்வருமாகிய பொன்னையா 22-01-93 அன்று காலமாகி விட்டார்.

இவர் நாகரெத்தினத்தின் அன்புக் கணவரும், தர்மபாலினி, காலஞ்சென்ற தர்மராஜினி, சாந்தகுமார் (ஜேர்மனி), விஸ்வலிங்கம் (அப்பன் - ஹொலன்ட்), தர்மயோகினி (சுவிஸ்), பரமேஸ்வரன், தர்மசாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், றஞ்சன் (விற்பனையாளர் நல். ப.நோ கூ.), பாலகிருஷ்ணன் (சுவிஸ்) கிருபாதேவி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுரா, தட்சாயினி, பிரகாசினி (சுவிஸ்) காதீபன் (சுவிஸ்), கௌதமன் (மொஸ்கோ) ஆகியோரின் அன்புப் பேரனும் புன்னாலைக் கட்டுவன் வடக்கு காலஞ்சென்ற விஸ்வலிங்கம்-தெய்வானைப்பிள்ளையின் அன்பு மூத்த மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-01-93 (ஞாயிறு) உடையார் ஒழுங்கை கொக்குவில் கிழக்கில் உள்ள பொன்னுத்துரை பொன்னம்பாள் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்;
வி. பூதப்பிள்ளை.
(மைத்துனன்)

(24182)

## திருமதி இராசையா செல்லம்மா
(Malayan Pensioner)

அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திருமதி இராசையா செல்லம்மா அவர்கள் 18 - 01 - 93 திங்கட்கிழமை கனடாவில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. இராசையா அவர்களின் அன்பு மனைவியும், திரு. மயில்வாகனம் பொன்னையா அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திரு. சரவணமுத்து, திருமதி இராஜேஸ்வரி, மாணிக்கவாசகர் (கனடா), திருமதி நாகேஸ்வரி தர்மராஜசிங்கம், திருமதி செல்வேஸ்வரி சர்வானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சிவபாக்கியம் சரவணமுத்து (Malaysia), திரு. K. மாணிக்கவாசகர் (கனடா), Dr. P. தர்மராஜசிங்கம், திரு. P. சர்வானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20 - 01 - 93 புதன்கிழமை கனடாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. P. தர்மராஜசிங்கம்
(மருமகன்)

''ஈஸ்வரி வாசம்''
அளவெட்டி.
(5497)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.